இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

சமீபத்தில் அங்கு நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்களைக் கருத்தில் கொண்டு, பிரான்ஸ் நாட்டிலுள்ள கத்தோலிக்கத் திருஅவை, இளைஞர்கள் மற்றும் சமூகத்தின் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட மக்களின் மனக்கவலையைப் போக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸ் நாட்டின் வாழ்வின் பொருளையும் நம்பிக்கையையும் மீட்டெடுக்க அழைப்பு



சமீபத்தில் அங்கு நிகழ்ந்த வன்முறைச் சம்பவங்களைக் கருத்தில் கொண்டு, பிரான்ஸ் நாட்டிலுள்ள கத்தோலிக்கத் திருஅவை, இளைஞர்கள் மற்றும் சமூகத்தின் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட மக்களின் மனக்கவலையைப் போக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அழைப்பு விடுத்துள்ளது. (Tours) நகரின் பேராயர், நிறுவனங்கள் மற்றும் பொது அமைப்புகள் வழியாக ஜனநாயக உரையாடல்களை மீண்டும் மீட்டெடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

"நம் நாடு, ஏற்றுக்கொள்ள முடியாத வன்முறைக்கு இரையாகியுள்ளது" அக்டோபர் 17 அன்று அமைதியான முறையில் அனுமதி பெற்று நடைபெற்ற பேரணிகளின் இடையே அரங்கேறிய "கடுமையான வன்முறைச் சம்பவங்களை" சுட்டிக்காட்டி இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இதில் பாதுகாப்புப் படையினர் தாக்கப்பட்டுப் காயமடைந்தனர்; கடைகள் சூறையாடப்பட்டு, பொதுச் சொத்துகளும் அரசு நிறுவனங்களின் கட்டடங்களும் சேதப்படுத்தப்பட்டன.

"இந்தக் கலவரக் காட்சிகள் நாட்டை பேரதிர்ச்சியிலும், பயத்திலும், மனவேதனையிலும் ஆழ்த்தியுள்ளன. மேலும், இந்த நெருக்கடிக்கான ஆழமான காரணங்கள் என்ன என்ற பல கேள்விகளையும் எழுப்பியுள்ளன" என்று ஆயர் பேரவையின் தலைமைப் பொறுப்பாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

வார இறுதியில் நடந்த இந்தப் போராட்டங்கள், உயர்நிலைப்பள்ளி மாணவர்கள் கடந்த ஒரு மாதமாக நடத்தி வரும் போராட்டங்களின் தொடர்ச்சியாகும். சில ஆயர்கள் இந்த இளைஞர்களை நேரில் சந்தித்துப் பேசினர். பள்ளிகளில் போதிய வகுப்பறைகள் மற்றும் படிப்பதற்கான அடிப்படை வசதிகள் இல்லாமை, ஆசிரியர்களின் பற்றாக்குறை, நிர்வாகச் சீர்கேடு மற்றும் தொடர் பணிப்புறக்கணிப்பு ஆகியவற்றால் தங்கள் கல்விச் சூழல் சீர்குலைந்துள்ளதாக மாணவர்கள் கவலை தெரிவித்தனர்.

தனிநபர்களின் மனவேதனையும் ஒன்றிணைவும் தேவைகளும்

இன்றைய உலகளாவிய புதிய சூழல், ஐரோப்பிய நெருக்கடிகள், போர்கள், சுற்றுச்சூழல் கவலைகள் மற்றும் நிலையற்ற வாழ்வாதார நிலைகள் ஆகியவை மக்களை 'மிகுந்த கவலையிலும் அச்சத்திலும்' ஆழ்த்தியுள்ளதாகப் பேராயர் ஜோர்டி விவரிக்கிறார்.

"இன்றைய மக்கள் தங்கள் எதிர்காலம் எப்படி இருக்கும் என்று யோசிக்கிறார்கள் — 'நாம் ஏன் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்? அல்லது 'இன்றைய வாழ்க்கைச் சூழலை எதிர்கொள்ள காலையில் ஏன் எழுந்திருக்க வேண்டும்?' என்றெல்லாம் நினைக்கத் தோன்றுகிறது." இந்த அச்சமும் கவலையும் பல இளைஞர்களைப் பெரிதும் பாதித்துள்ளன. ஆனால், தங்களுடைய இந்த மனவேதனைக்கான சரியான காரணத்தை அவர்களால் தெளிவாக வெளிப்படுத்த முடிவதில்லை. சமூகத்தில் தாங்கள் புறக்கணிக்கப்படுவதாக உணர்ந்த பிரான்ஸ் மக்களும் வீதிகளில் இறங்கி இவர்களோடு இணைந்து கொண்டனர். பேராயர் ஜோர்டி இதைக் குறிப்பிட்டு, "பொதுவான ஒரு தளத்தைக் கண்டறியவும், ஒற்றுமையை அடையவும் சிரமப்படும் ஒரு சமூகத்தில் இது ஒரு பரவலான அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது" என்று வேதனை தெரிவிக்கிறார். இத்தகைய சமூகத்தில், மக்கள் பொதுநலனைக் கருத்தில் கொள்ளாமல், "தங்கள் சொந்தக் கூண்டுக்குள் முடங்கி, தங்களின் சுயநலன்களை மட்டுமே பாதுகாத்துக் கொள்ள முற்படுகிறார்கள்."

வன்முறைச் சூழலுக்கு முற்றுப்புள்ளி வைத்தல்

வார இறுதியில் வெடித்த வன்முறைச் சம்பவங்கள், மக்களிடையே இருந்த கொந்தளிப்பை மேலும் அதிகரித்துள்ளன. இதை ஒரு 'அழிவுகரமான நச்சுச் சூழல்' என்று பிரான்ஸ் ஆயர் பேரவை விவரிக்கிறது.

"தற்போது நிலவும் குழப்பமான சூழலைப் பயன்படுத்தி, சிலர் தங்களது சுயநல நோக்கங்களை நிறைவேற்ற முயல்கிறார்கள் என்பது தெளிவாகத் தெரிகிறது. இவை நியாயமான கோரிக்கைகள் அல்ல; மாறாக, குழப்பத்தைப் பயன்படுத்தி, மக்களின் வேதனையோடு வன்முறையையும் கூட்டுவதற்கான முயற்சியாகும்" என்று (Tours) நகரின் பேராயர் குறிப்பிடுகிறார். "இந்த வன்முறை சில நேரங்களில் எவ்வித பாகுபாடுமின்றி கட்டவிழ்த்து விடப்படுகிறது. இதனால் அப்பாவி மக்களின் உழைப்பு வீணாகிறது" — மேலும் பொதுக் கட்டடங்கள் சூறையாடப்பட்டு தீக்கிரையாக்கப்படுகின்றன. "சிலர் சமூகத்தின் அமைதியையும் ஒழுங்கையும் சீர்குலைக்க முயல்கிறார்கள் என்பது தெளிவாகிறது."

இன்றைய சமூகம் "நுகர்வோர் கலாச்சாரம், இன்பவியல் (hedonism) மற்றும் சுயநலம்" ஆகியவற்றின் அடிப்படையில் இயங்குகிறது என்று சுட்டிக்காட்டும் பேராயர், "இறுதியில், இந்த அமைப்பு நமது பூமியை அழித்து, ஏமாற்றங்களை அதிகரித்து, சமத்துவமின்மையை விரிவுபடுத்துகிறது என்பதை நாம் இப்போது உணர்கிறோம். அனைத்திற்கும் மேலாக, இது நமது சொந்த வாழ்வின் அர்த்தத்தையே நம்மிடமிருந்து பறித்துவிடுகிறது; வாழத் தேவையான அனைத்தும் இருந்தும், உண்மையான மகிழ்ச்சிக்கான தாகம் தணியாத மனிதர்களையே நாம் இன்று காண்கிறோம்" என்று கூறினார்.

தமிழாக்கம் ஹெரால்டு

'அமோரிஸ் லேத்திசியா' (அன்பின் மகிழ்ச்சி): குடும்பங்களின் பலவீனங்களைக் கேட்டறிதல், அவசரத் தீர்ப்புகளைத் தவிர்த்தல்

'அமோரிஸ் லேத்திசியா' கூட்டத்தையொட்டி பேசிய, இறையியலாளர் ஜூலி ஹான்லன் ரூபியோ "அன்புக்கும் நீதிக்கும் வழிவகுக்கும் நெருக்கமான கூட்டணைப்பாகத் திருமணத்தைப் பார்க்கும் பார்வையை" புதுப்பிக்க அழைப்பு விடுத்துள்ளார். அதேவேளையில், பிலிப்பீன்ஸ் நாட்டைச் சேர்ந்த கர்தினால் பாப்லோ விர்ஜிலியோ சியோங்கோ டேவிட், "குடும்பங்கள் எதிர்கொள்ளும் உண்மையான போராட்டங்களில், திருச்சபை எந்தளவுக்கு அவர்களோடு இணைந்து பயணிக்கத் தயாராக இருக்கிறது?" என்று திருச்சபை தன்னைத்தானே கேட்டுக்கொள்ள வேண்டும் எனக் கூறியுள்ளார்.

திருத்தூது அறிவுரைச் சுற்றறிக்கையான 'அமோரிஸ் லேத்திசியா' (அன்பின் மகிழ்ச்சி) வெளியாகி பத்தாண்டுகள் நிறைவடைவதைக் குறிக்கும் வகையில் வத்திகானில் நடைபெறும் இக்கூட்டத்தின் நான்காம் நாள் கருப்பொருளைப் பற்றி கர்தினால் கெவின் ஃபேரல் பேசினார்.

திருமண உறவிலிருந்து விலகிச் செல்லும் உலகளாவிய வழல்

முந்தைய தசாப்தங்களின் புள்ளிவிவரங்களோடு ஒப்பிடும்போது, இன்றைக்கு மக்கள் திருமணத்தைத் தேர்ந்தெடுப்பதில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்த இறையியல் சிந்தனையோடு கூட்டம் தொடங்கியது.

பிலிப்பீன்ஸ் முதல் போலந்து வரையிலும், அர்ஜென்டினா முதல் தென்னாப்பிரிக்கா வரையிலும், அமெரிக்கா முதல் ஜப்பான் வரையிலும் உலகெங்கிலும் திருமண உறவிலிருந்து மக்கள் விலகிச் செல்லும் போக்கு வேகம் எடுத்துள்ளது. திருமணமே செய்யாத பெரியவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து உயரும் என்று ரூபியோ குறிப்பிட்டார். குறிப்பாக, ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட இன்று அமெரிக்கக் கத்தோலிக்கர்களிடையே திருமணம் முழப்போரின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது. அவர்களிலும் நான்கில் ஒரு பகுதியினரே திருஅவையில் கத்தோலிக்கத் திருமணச் சடங்கைச் செய்கிறார்கள்.

கென்யா, உக்ரைன், இந்தியா உள்ளிட்ட பல நாடுகளிலும் பிறப்பு விகிதம் குறைந்து வருகிறது. திருமுழுக்கு பெறும் குழந்தைகளின் எண்ணிக்கையும் 1990-களோடு ஒப்பிடும்போது மூன்றில் ஒரு பங்காகக் குறைந்துள்ளது.

இது குறித்துப் பேசிய அமெரிக்கப் பேராசிரியை, "இன்றைய திருமணங்கள் அதிகப் பரஸ்பர அன்பும் திருப்தியும் தருபவையாக இருக்கின்றன; ஆனால் அதே சமயம் அவை அதிக எதிர்பார்ப்புகள் கொண்டதாகவும், குறைந்த குழந்தைகளைக் கொண்டதாகவும், எளிதில் முறியக்கூடிய பலவீனமானதாகவும் இருக்கின்றன" என்றார். திருமணத்திற்கு 'அன்பு' மிக முக்கியம் என்றாகிவிட்ட நிலையில், தனக்கேற்ற சரியான வாழ்க்கைத்துணையைக் கண்டறிவது மக்களுக்குக் கடினமாக உள்ளது.

திருமண உறவில் உண்மையின்மை (துரோகம்) மற்றும் குடும்ப வன்முறைகள் நிறைந்திருப்பதைப் பார்த்து அச்சமடைந்து, சிலர் திருமண வாழ்க்கையையே வேண்டாம் என்று நிராகரிக்கின்றனர். இது பெற்றோர் பொறுப்பை ஏற்பதற்கான ஆயத்தமின்மையை வளர்த்து, குழந்தை பெற்றுக்கொள்வதைத் தள்ளிப்போடச் செய்கிறது; இறுதியாக, குடும்பத்தைத் தொடங்குவதற்கான சரியான காலம் கடந்துவிட்டதை உணர்கிறார்கள்.

திருஅவையின் 'நம்பிக்கையூட்டும் பார்வை'

ரூபியோ ஒரு முக்கியமான பிரச்சனையைச் சுட்டிக்காட்டினார்: "குறிப்பாகக் கத்தோலிக்கத் தம்பதியர் தங்களது குடும்பப் போராட்டங்களின்போது யாரிடமும் பகிர்ந்து கொள்ளாமல் தனிமைப்பட்டுப்போகிறார்கள்." முதிய வயதில் தம்பதியரிடையே அதிகரிக்கும் விவாகரத்து விகிதங்களிலும் இந்த உண்மை வெளிப்படுகிறது.

எனவே, தம்பதியர் தங்கள் குடும்பத்தை மட்டும் பார்க்காமல் "வெளிநோக்கிப் பார்க்க" ஊக்குவிக்கப்பட வேண்டும் என்று அவர் கூறினார். இதில் கத்தோலிக்க இறையியல் ஒரு முக்கியமான வழிகாட்டலைத் தருகிறது: 'பெரிய இலக்கை நோக்கி அர்ப்பணிக்கப்பட்ட ஒரு நெருக்கமான கூட்டணைப்பே திருமணம்'.

"இந்தச் சூழலில், திருமணத்தின் பலவீனமான நிலைக்குத் திருஅவை தனது நம்பிக்கையூட்டும் பார்வையின் மூலம் பதிலளிக்க வேண்டும்" என்று கூறிய ரூபியோ, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் சொற்களை நினைவு கூர்ந்தார்: "மனித அன்பு குறையுடையதாக இருப்பதால் மட்டுமே அது போலி என்றோ அல்லது உண்மையில்லை என்றோ ஆகிவிடாது."



மனிதப் பலவீனம் என்பது தீர்க்கப்பட வேண்டிய ஒரு பிரச்சனை அல்ல; மாறாக அது நமது மனித வாழ்வின் ஒரு பகுதி, அதை ஏற்றுக்கொண்டு ஒருங்கிணைக்க வேண்டும் என்று திருஅவை ஆவணங்களும் கூறுகின்றன.

மக்களின் நிஜ வாழ்க்கைக் கதைகளுக்கும் போராட்டங்களுக்கும் செவிமடுத்தல்

பிலிப்பீன்ஸின் கர்தினால் பாப்லோ விர்ஜிலியோ சியோங்கோ டேவிட், தனது கலூக்கான் மறைமாவட்டத்தின் நிஜ நிலைமைகளை நெகிழ்ச்சியோடு பகிர்ந்துகொண்டார். அமோரிஸ் லேத்திசியா ஆவணம் தங்களுக்கு எத்தகைய புரிதலைக் கொடுத்துள்ளது என்பதை விவரித்த அவர்: "குடும்பங்கள் கிறிஸ்தவ லட்சியத்தை எந்தளவுக்கு அடைகிறார்கள் என்று கேட்பதை விட, குடும்பங்களின் உண்மையான போராட்டங்களில் திருஅவை எந்தளவுக்கு அவர்களோடு நெருங்கிச் செல்லத் தயாராக இருக்கிறது? என்றுதான் நாம் கேட்க வேண்டும்" என்றார். "அவர்களோடு இணைந்து பயணிப்பது என்பது ஒரு குருவோ அல்லது மறைப்பணிப் பணியாளரோ ஒரு குடும்பத்திற்குச் செய்வது மட்டும் அல்ல; அது அக்குடும்பத்தைச் சுற்றி ஒரு கிறிஸ்தவ சமூகம் எப்படி அன்புடைமையாக மாறக் கற்றுக்கொள்கிறது என்பதில்தான் இருக்கிறது" என்று கர்தினால் வலியுறுத்தினார்.

தமிழாக்கம் ஹெரால்டு

அருப்பணி முனைவர் கிளாரன்ஸ் தேவதாஸ், சர்வதேச இறையியல் ஆணையத்திற்கு தேர்வு



ஆசிய ஆயர்கள் பேரவைகள் கூட்டமைப்பின் (FABC) இணைச் செயலாளரான அருட்பணி கிளாரன்ஸ் தேவதாஸ் அவர்கள், சர்வதேச இறையியல் ஆணையத்தின் 2026–2031 ஆம் ஆண்டுகளுக்கான புதிய உறுப்பினராகத் திருத்தந்தை 14-ஆம் லியோ அவர்களால் நியமிக்கப்பட்டுள்ளார்.

வத்திகான் செய்திகளின்படி, இந்த ஆணையத்தில் நியமிக்கப்பட்டுள்ள நான்கு ஆசியப் பிரதிநிதிகளுள் இவரும் ஒருவர். இதில் 24 புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கடந்த தவணையில் பணியாற்றிய 6 உறுப்பினர்கள் மீண்டும் உறுதிச்செய்யப்பட்டுள்ளனர். இந்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு அக்டோபர் 19 அன்று வெளியிடப்பட்டது. கோலாலம்பூரில் உள்ள கத்தோலிக்க ஆராய்ச்சி மையத்தின் இயக்குநராகவும், FABC-இன் (Synodality) ஆணையத்தின் நிர்வாகச் செயலாளராகவும் அருட்பணி முனைவர் தேவதாஸ் பணியாற்றி வருகிறார். இவரைத் தவிர இந்தியா, தைவான் மற்றும் தென் கொரியாவைச் சேர்ந்த பிரதிநிதிகளும் இந்த ஆணையத்தில் இடம்பெற்றுள்ளனர். இக்குழு திருப்பீடத்திற்கு முக்கிய விசுவாச மற்றும் போதனைச் சார்ந்த விவகாரங்களில் ஆலோசனைகளை வழங்கும்.

இந்த நியமனங்களுடன் சர்வதேச இறையியல் ஆணையத்தின் 11-வது ஐந்தாண்டுத் தவணைத் தொடங்குகிறது. உறுப்பினர்களின் எண்ணிக்கை 28-லிருந்து 30 ஆக உயர்த்தப்பட்டு, ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் தென் அமெரிக்க நாடுகளுக்குக் கூடுதல் பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

இவ்ஆணையம் வத்திகானின் விசுவாசக் கோட்பாட்டிற்கான துறையகத்திற்கு (Dicastery for the Doctrine of the Faith) உதவி கரமாகச் செயல்படுகிறது. குறிப்பாக, தற்காலச் வழலில் எழும் முக்கிய இறையியல் மற்றும் விசுவாசம் சார்ந்த கேள்விகளை ஆராய இது உதவுகிறது. உலகின் பல்வேறு நாடுகள், கல்விப் பாரம்பரியங்கள் மற்றும் திருஅவை பின்னணிகளைச் சேர்ந்த சிறந்த இறையியலாளர்களை இது ஒன்றிணைக்கிறது.

1969-ஆம் ஆண்டு திருத்தந்தை ஆறாம் சின்னப்பரால் இந்த சர்வதேச இறையியல் ஆணையம் உருவாக்கப்பட்டது. ஆயர் பேரவைகளின் கலந்தாலோசனைக்குப் பிறகும், விசுவாசக் கோட்பாட்டுத் துறையகத் தலைவரின் பரிந்துரையின் பேரிலும், ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை திருத்தந்தையால் உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள்.

இந்த ஆணையத்தின் வழக்கமான முழு அமர்வுக்கூட்டம் (Plenary session) வரும் நவம்பர் 23 முதல் 27 வரை நடைபெற திட்டமிடப்பட்டுள்ளது.

போர்ட் கிள்ளான் வாழ்வியல் திறன் மையம் திறப்பு



போர்ட் கிள்ளான் வாழ்வியல் திறன் மையம் (Life Skills Centre – Port Klang), கம்போங் கெரத்தாப்பி (Kampung Keretapi) சிறுவர்களுக்கான தனது அன்புப் பணியைத் தொடர்ந்து நடத்தி வருகிறது. ஆங்கிலம் மற்றும் கணிதப் பாடங்கள் முதல் சமையல், பேக்கிங் (Baking) மற்றும் படைப்பாற்றல் கலைகள் வரை, குழந்தைகள் தங்கள் பள்ளிப் படிப்பிற்கும் அன்றாட வாழ்க்கைக்கும் தேவையான திறன்களைக் கற்றுக்கொள்ள இம்மையம் பெரிதும் உதவுகிறது.

கடந்த செப்டம்பர் 5ஆம் நாளன்று, பேராயர் ஜூலியன் லியோ (Archbishop Julian Leow) இம்மையத்தை அதிகாரப்பூர்வமாகத் திறந்து வைத்து ஆசீர்வதித்தார். 1990-களின் தொடக்கத்தில் திவ்ய நற்கருணைத் தாயின் பிரான்சிஸ்கன் மறைப்பணிச் சகோதரிகள் (FMDM Sisters) தொடங்கிய இந்த நற்பணியின் தொடர்ச்சியாக இந்நிகழ்வு அமைந்துள்ளது.

முன்னதாக 'எஜுகேர் மையம்' (Educare Centre) என்று அழைக்கப்பட்ட இம்மையம், கம்போங் கெரத்தாப்பியின் குடிசைப் பகுதிகளில் வாழும் குடும்பங்களுக்குக் கல்வி ஆதரவு, சுகாதார உதவி மற்றும் உணவுப் உதவிகளை வழங்குவதற்காகச் சகோதரிகளால் தொடங்கப்பட்டது.

ஆண்டுகள் உருண்டோட தன்னார்வலர்கள், ஆசிரியர்கள், நிறுவனங்களின் பிரதிநிதிகள், கல்லூரி மாணவர்கள் மற்றும் பங்குச் சமூகத்தின் உதவியோடு இதன் கல்வித் திட்டங்கள் தொடர்ந்து வளர்ந்தன. முன்னாளில் இங்குப் படித்துப் பயனடைந்த மாணவர்களும், தங்களுக்குக் கை கொடுத்த இந்த மையத்தின் பணிகளில் மீண்டும் வந்து இணைந்து கொண்டது இதன் சிறப்புமிக்க அம்சம்.

கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தில் 32 ஆண்டுகள் சேவையாற்றிய பிறகு, 2022-ஆம் ஆண்டில் எஃப்.எம்.டி.எம் (FMDM) சகோதரிகள் ஏழை எளிய மக்களுக்குத் தொடர்ந்து பணியாற்றுவதற்காக ஈப்போ மற்றும் தைப்பிங் பகுதிகளுக்குத் தங்களது மறைப்பணிக்காக அனுப்பப்பட்டனர்.

இந்த நற்பணியைத் தொய்வின்றி முன்னோக்கி எடுத்துச் செல்ல உறுதிக்கொண்ட நிர்வாகக் குழு உறுப்பினர்கள், மையத்தைத் தொடர்ந்து நடத்துவதற்காகப் பேராயர் ஜூலியன் லியோ அவர்களின் ஆசீரைப் பெற்றனர். அதன்பின், அதே ஆண்டின் மே மாதத்தில் 'போர்ட் கிள்ளான் வாழ்வியல் திறன் மையம்' உருவாக்கப்பட்டு, கம்போங் கெரத்தாப்பி சுற்றியுள்ள குழந்தைகளுக்கு அடிப்படைக்கல்வி, சுகாதாரப் பராமரிப்பு மற்றும் நடைமுறை வாழ்வியல் திறன்களை வழங்கும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டன.

இன்று, இம்மையத்தில் 7 முதல் 16 வயது வரையிலான 22 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இவர்களுக்கு 7 தன்னார்வலர்களும் 4 ஆசிரியர்களும் ஆதரவாகச் செயல்பட்டு வருகிறார்கள்.

வாரநாட்களில் நடைபெறும் வகுப்புகளில் ஆங்கிலம், மலாய் மொழி (Bahasa Malaysia) மற்றும் கணிதப் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. அதேபோல, மாற்று சனிக்கிழமைகளில் சமையல், பேக்கிங், படைப்பாற்றல் கலைகள், சுகாதாரப் பராமரிப்பு மற்றும் உடற்பயிற்சி போன்ற வாழ்வியல் திறன் பயிற்சிகளும், வெளிப்புற நடவடிக்கைகளும், பல்வேறு தனியார் நிறுவனங்களின் ஆதரவுடன் ஊக்கமளிக்கும் உரையாடல்களும் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன.

இந்தத் திறப்பு விழாக்கொண்டாட்டத்தின் போது, குழந்தைகள் தங்களின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் கைவினைப் பொருட்களின் கண்காட்சி மூலமாகத் தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். மையத்தின் கடந்தகால நினைவலைகள் புகைப்படக் காட்சியாகத் திரையிடப்பட்டன; மதிய உணவின் போது இச்சேவையில் பங்குபெற்ற அனைவரும் ஒன்றாக இணைந்து மகிழ்ந்தனர்.

மையத்தின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த தன்னார்வலர்கள், ஆசிரியர்கள் மற்றும் நிர்வாகக் குழு உறுப்பினர்களின் பங்களிப்பைப் போற்றும் வகையில் அவர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன. புதிய தலைமுறைச் சிறுவர்களுக்கு இம்மையம் தொடர்ந்து பணியாற்றிடப் பேராயர் ஜூலியன் லியோ அவர்கள் வழங்கிய ஆசீரோடு இந்த விழா நிறைவுற்றது.

ஜொகூர் கூலாய், கிறிஸ்து அரசர் தேவாலயத்தின் 75-ஆம் ஆண்டு பவள விழா



கடந்த 75 ஆண்டுகளாக, விசுவாசம், தோழமை மற்றும் எண்ணற்ற விலையேறப்பெற்ற நினைவுகளோடு கூலாய் கிறிஸ்து அரசர் தேவாலய மக்கள் இணைந்து பயணித்து வந்துள்ளனர்.

கடந்த செப்டம்பர் 27ஆம் நாள் பங்கு மக்கள் ஒன்றாக இணைந்து, கிறிஸ்து அரசர் தேவாலய தோற்றத்தின் வரலாற்றுச் சிறப்புமிக்க இக்கொண்டாட்டத்தை வெகு விமரிசையாக் கொண்டாடி இறைவனுக்கு சாட்சிகளாக ஒப்புக்கொடுத்தனர். கூட்டுத் திருப்பலி, கலை கலாச்சார கலைநிகழ்ச்சிகள், மறைக்கல்வி மாணவர் படைப்புகள், விருந்து உபசரிப்பு என பவள விழா மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த நிகழ்வில் மலாக்கா ஜொகூர் மறைமாவட்டத்தின் ஆயர் பெர்னட் போல் அவர்களுடன் பினாங்கு மறைமாவட்ட ஆயரும் கர்தினல் செபஸ்டியன் பிரான்சிஸும் கலந்து சிறப்புச் செய்தனர்.

அனைத்துப் புனிதர்களின் பெருவிழா

திரு.வெ 7:2-4, 9-14. 1யோ 3:1-3, மத் 5:1-12

அன்னல் காந்தியடிகளின் உள்ளதை ஈர்த்த மறைநூல் பகுதி இன்றைய நற்செய்தி. தனது வாழ்வை மாற்றி அமைத்த, புரட்டிப் போட்ட வார்த்தை என அவரே தனது சுய சரித்திர நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஆம், இயேசு காட்டும் ஏழையரின் உள்ளம், உள்ளத்தூய்மை, கனிவு, இரக்கம், நீதியின்பால் வேட்கை, அமைதி நிலை நாட்டுதல், போன்ற பண்பு நலன்கள் அணிகலன்களாக கொண்டுள்ளோரே எதிர்ப்புக்கும், அச்சுறுத்தல்களுக்கும் அஞ்சாமல் துணிவுடன் சீடத்துவத்தை ஆழப்படுத்த வேண்டுமாம். நற்செய்தி விடுக்கும் சவால்களை வாழ்வில் துணிவுடன் ஏற்று எளிய நம்பிக்கையாளர்களாக சாட்சி பகருவோம்.

இன்று அனைத்து புனிதர்களின் பெருவிழாவைக் கத்தோலிக்க திருஅவை கொண்டாடுகிறது. புனிதர்கள் தங்கள் வாழ்வில் சந்தித்த நெளிவு சுளிவுகளை, மேடு பள்ளங்களை, ஏமாற்றங்களை, புகழ் மகுடங்களை, துயரங்களைச் சந்தித்தவர்கள்தான்.

ஒரே நாளில் இவர்கள் இந்த புனிதர்கள் உயரத்தை அடையவில்லை. கடந்து வந்த பாதைகளில் இவர்களும் பாவிகளாய் வாழ்ந்துள்ளார்கள். ஆயினும் அன்றாட ஜீவியத்தில் பல போராட்டங்களைச் சந்தித்து, இறைவனோடு ஒன்றித்து வாழ்ந்துள்ளார்கள்.

இவர்கள் சாட்சி பகர எடுத்துக்கொண்ட அறவாழ்வில், படாதபட்டு சொல்லால், செயலால், கடமையால் நீதியை நிலைநாட்ட வாழ்ந்துள்ளதால் இவர்கள் இன்று புனிதர்களாக வளர்ச்சி பெற்றவர்களாக நம்மில் திகழ்கிறார்கள்.

புனிதர்கள் நமது வாழ்வில் நம்பிக்கை நட்சத்திரங்கள். எவரெல்லாம் பிறரன்பும் இறையன்பும் கொண்டு வாழ்கிறார்களோ அவர்களை வரலாறு மறக்காது என்பதற்கு இவர்களே சாட்சிகள். நாளைய வரலாறு இவர்களைப்பற்றி எடுத்துரைக்கும்.

நம் காலத்தில், நம்மோடு வாழ்ந்த கல்கத்தா அன்னை தெரெசா ஏழைகளின் மத்தியில் இயேசுவைக் கண்ட புனிதர். இறைவனின் அழைப்பை ஏற்ற நல்லதொரு உப்பு ஒளி எனலாம். அவர்களின் சீடத்துவ வாழ்வை அறிந்து, முன்மாதிரிகையான கிறிஸ்துவின் பண்பு நலன்களை உலகிற்கு சொல்லால், செயலால், கடமையால் வாழ்ந்துக் காட்டியவர்.

நாளை, இறந்த நம்பிக்கையாளர் அனைவர் நினைவு நாள். எனவே ஆன்மாக்களின் நாளில் நம்மைவிட்டு பிரிந்த எல்லா விசுவாசிகளுக்காக நாம் செபிப்போம்.

மனித இறப்பு அழிவு அல்ல. அதுவொரு புதிய வாழ்வின் பிறப்பு. கிறிஸ்தவ விசுவாசிகளின் இறப்பு என்பது கிறிஸ்துவில் உயிர்ப்பு என்று திருஅவையால் நம்பப்படுகிறது. இதைத்தான் புனித பவுல் இறந்த கிறிஸ்து உயிருடன் எழுப்பப்பட்டார். இவ்வசனம் அனைவரும் உயிருடன் எழுப்பப்படுவார்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது.

இறைவனோடு இணைந்து வாழும் உன்னதமான வாழ்வை நோக்கி குடும்பத்தோடு, சமூகத்தோடு, பங்கோடு, பிற இனத்து மக்களோடு இணைந்து சாட்சியம் பகருவோம்.

ஆ.வி.டேவிட்.

பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்

உங்களின் கட்டுரைகள், கருத்துக்கள், பகிர்வுகள், பங்குச் செய்திகளை நாங்கள் பெரிதும் வரவேற்கிறோம். 400-500 சொற்களுக்குள் அமைந்த கட்டுரைகள், அவற்றுக்கான விளக்கக் குறிப்புகளுடன் (caption) கூடிய உயர் தெளிவுத்திறன் (HD) கொண்ட JPG அல்லது PNG வடிவத்திலான புகைப்படங்கள் ஆகியவற்றை அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

உங்களது கட்டுரைகளை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது வாட்ஸ்அப் எண்ணிற்கு அனுப்பி வைக்கலாம்:

மின்னஞ்சல்: tamil@herald.com.my வாட்ஸ்அப்: 012-5599015